## ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம்

*404 வினா.—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பொன்னேரி வட்டம், புதுவாயல்-பெரியபாளையம் நெடுஞ் சாலையுடன் புதுப்பாளையம் கிராமத்தை இணைக்க, ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் (Road Dam) கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, இது சாதாரணமான தரைப்பாலம். இதற்கு ஏறக்குறைய 4 அல்லது 5 லட்சம் ரூபாய் ஆகும் என்ற காரணத்தால் பொதுப்பணித் துறைக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறோம். கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், பொதுப்பணித் துறை விரைவில் இதைக் கட்டிக் கொடுக்குமாறு பரிந்துரை செய்வார்களா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்தப் பாலத்தைக் கட்டுவதற்குத் தோராயமாக 8¼ லட்சம் ரூபாய் ஆகும் என்று தலைமைப் பொறியாளர் கூறியிருக்கிறார். 1971-72-ம் திட்டத்தில் இதைச் சேர்க்க வேண்டுமென்றால், அதற்கு நிதிநிலைமை இடம் தராததால் இது தள்ளி வைக்கப்பட்டது. இதர வேலைகளின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகை 190 லட்சம் ரூபாய். நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தொகை முதல் மூன்று ஆண்டுகளிலேயே செலவழிக்கப்பட்டுவிட்டது. அடுத்த திட்ட சூழ்நிலையில்தான் இது ஏற்றுக்கொள்ளப்படும். இப்போது இருக்கிற நிதிநிலைமை சீராக இல்லை. நிதிநிலைமை சீர்பட்ட பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

## *Encroachment in Singampuneri*

*405 Q.—Thiru K. T. K. THANGAMANI : Will the Hon. Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether it is a fact that evictions are taking place in Singampuneri by orders of the Commissioner of Panchayat Union.

(b) whether it is a fact that a protest meeting was held on 2nd September 1971 and representation sent; and

(c) the action taken thereon?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** (அ) ஆம். சிங்கம்புனரி பேரூராட்சியைச் சேர்ந்த நில அளவை எண் 564/8-ல் உள்ள நிலத்தில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பு ஒன்று, 28—8—1971-ல் பேரூராட்சி நிர்வாக அதிகாரியால் அகற்றப்பட்டது.

1971 டிசம்பர் 15]

(இ) ஆம். இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி ஏற்பாடு செய்த கண்டனக் கூட்டம் ஒன்று 2—9—1971-ல் நடைபெற்றது. ஆனால். கூட்ட நாளன்றோ அதன் பின்னரோ பேரூராட்சி நிர்வாக அதிகாரிக்கு முறையீடு ஏதும் வந்து சேரவில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

**திரு. கே. டி. கே தங்கமணி :** இம்மாதிரியாக வெளியேற்றப் படக்கூடிய நேரத்திலே சில குறிப்பிட்ட கட்சிகளைச் சேர்ந்த வர்களைத் தனிமைப்படுத்தி அவர்களை மட்டும் வெளியேற்றுகின்ற நிலைமை இருக்கின்றதே அம்மாதிரி வராத அளவுக்கு அரசு பார்த்துக் கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, அந்த இடம் சிலபல ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கிரமிக்கப்பட்டு முறைப்படி அவர்கள்—அந்த இடம் கழிவிடத்திற்காக ஒதுக்கப் படவேண்டுமென்ற காரணத்தினால்—வெளியேற்றப்பட்டார்கள். ஆனால் மறுபடியும் அங்கே ஆக்கிரமிப்புச் செய்யப்பட்டதன் காரணமாக அவர்களை அகற்றவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. திருப்பத்தூர் தாசில்தார் முன்னிலையிலும், சிங்கம்புனரி காவல் துறை அதிகாரி முன்னிலையிலும் அகற்றப்பட்டார்கள். அவர் களிடத்திலே ஒரே சமாதான உடன்படிக்கையின் மூலமாக வேறு இடம் பார்த்துக்கொள்ளலாம், இந்த இடம் அவசியமாகத் தேவைப்படுகிறது என்று சமாதான முடிவு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

### சீரணிப்படையினரின் பணிகள்

* 406 வினா.—**திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு தொழி லாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971 ஆகஸ்டு திங்கள் 19-ஆம் நாளன்று சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து ஆய்வுப் பணிக்கு சீரணிப் படையினரின் உதவி கேட்கப்பட்டதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** இல்லை.

* 407 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :

(அ) சென்னை நகரில் சீரணிப் படையினர் மூலம், பஸ் பயணிகள் நிற்பதற்கான நிழற்குடைகள் தற்போது எத்தனை கட்டப்பட்டுள்ளன ?

(இ) அவற்றிற்கு ஆன செலவு எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) 48 நிழற் குடை களுக்கு ஏற்பாடு செய்து 28 அமைக்கப்பட்டு விட்டன.

(இ) 28 நிழற்கொடைகளுக்கு ஆன செலவு ரூ. 35,500.